நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.ம.சதிஸ்குமார், பி.இ.,

நி.மு.அ3/152/2022, நாள் : 16.11.2024

பொருள் : பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – திரு.மு.ஆனந்தகிருஷ்ணன், இளநிலை வருவாய் ஆய்வாளர் – மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலகம், உதகமண்டலம் – பணிவரன்முறை செய்து உத்தரவு

படிக்கப் பட்டவை :
1. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3.எண். 152/2022, நாள்: 10.11.2023.
2. மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எச்2.6125565/ 2023, நாள்: 06.12.2023.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.அ3.எண். 152/2022, நாள்: 24.09.2024.
4. மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எச்2.6125565/ 2023, நாள்: 05.11.2024.

-----

உத்தரவு :

பார்வை 1-இல் படிக்கப்பட்ட செயல்முறைகளின்படி, நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் அலுவலக உதவியர் நிலையில் பணிபுரிந்து வந்த திரு.மு.ஆனந்தகிருஷ்ணன் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பதவி உயர்வு வழங்கி உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2-இல் படிக்கப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் கடிதத்தில், மேற்காணும் தனியர் கடந்த 01.12.2023 முற்பகல் அன்று பணியில் இணைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நேர்வில், மேற்காணும் தனியரின் பணியினை வரன்முறை செய்ய ஏதுவாக, பார்வை 3-இல் படிக்கப்பட்ட

இவ்வலுவலக கடிதம் மூலம் அறிக்கை கோரப்பட்டதில், பார்வை 4-இல் படிக்கப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் அவர்களின் கடிதத்தில் திரு.மு.ஆனந்தகிருஷ்ணன், இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவர் கடந்த 01.12.2023 முற்பகல் அன்று இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் இணைந்ததாகவும், தனியரின் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் துவங்கப்படும் நிலையிலோ அல்லது துவங்கப்பட்டு நிலுவையிலோ இல்லை மற்றும் தண்டனைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை எனவும், எனவே மேற்படி தனியரின் பணியினை வரன்முறை செய்ய பரிந்துரை செய்வதாக தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.மு.ஆனந்த கிருஷ்ணன், இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவரது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பின்வருமாறு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் (ம) பணிபுரியும் அலுவலகம் | பணியில் இணைந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1) | திரு.மு.ஆனந்த கிருஷ்ணன், இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலகம், உதகமண்டலம் | 01.12.2023 முற்பகல் | 01.12.2023 முற்பகல் |

ஒம்/-ம.சதிஸ்குமார்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியர் (பொது)
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.

பெறுநர்
திரு.மு.ஆனந்த கிருஷ்ணன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலகம்,
உதகமண்டலம்

நகல் : மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்,
உதகமண்டலம்

//உ.ந.உ.ப//

தலைமைப் பொறுப்பாளர் (பொது)

16/11/24